# 8th Social Science Lesson 12 Questions in Tamil

## 12. இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி

1. "பருத்தி உற்பத்தியின் பிறப்பிடம் இந்தியா என்றும் அது உண்மையான வரலாற்று காலத்திற்கு முன்பே செழித்தோங்கி இருந்தது" என்றும் கூறியவர்

A) பெர்னியர்

B) டவேர்னியர்

**C) எட்வர்ட் பெயின்ஸ்**

D) மெகஸ்தனிஸ்

**(குறிப்பு: விவசயமும் கைவினைப் பொருட்கள் கலந்த கலவையாகவே இந்திய பாரம்பரிய பொருளாதாரம் காணப்பட்டது.)**

2. கூற்று 1: முகலாய பேரரசர் ஷாஜஹான் ஆட்சியின்போது இந்தியாவிற்கு வருகை தந்த பெர்னியர் என்பவர் இந்தியாவில் நம்பமுடியாத எண்ணிக்கையில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டதைக் கண்டு வியப்படைந்தார்.

கூற்று 2: பிரெஞ்சு நாட்டு பயணி டவேர்னியர் இந்தியாவில் உள்ள மயிலாசனம், பட்டு மற்றும் தங்கத்தினாலான தரை விரிப்புகள், சிறிய அளவிலான சிற்ப வேலைப்பாடுகளையும் கண்டு வியப்படைந்தார்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

3. இயந்திரமயமாக்கப்பட்ட தொழிற்சாலைகள் வருவதற்கு முன்னர், இந்திய கிராமங்களில் விவசாயத்திற்கு அடுத்த நிலையில்__________ தொழில் பெரிய வேலைவாய்ப்பாக இருந்தது.

A) சுரங்கம்

B) வணிகம்

C) போக்குவரத்து

**D) கைவினைத்தொழில்**

**(குறிப்பு: நெசவு, மரவேலை, தந்த வேலை, மதிப்புமிக்க கற்களை வெட்டுதல், தோல், வாசனை மரங்களில் வேலைபாடுகள் செய்தல், உலோக வேலை மற்றும் நகைகள் செய்தல் ஆகிய பாரம்பரிய தொழில்களில் இந்தியா மிகவும் புகழ்பெற்று விளங்கியது.)**

4. மணி தயாரிக்கப் பயன்படும் உலோகமான வெண்கலத்துக்கு ____________ பெயர்பெற்றது.

A) மகாராஷ்டிரா

**B) சௌராஷ்டிரா**

C) குஜராத்

D) வங்காளம்

**(குறிப்பு: நெசவாளர்கள், தையல்காரர்கள் மற்றும் சாய தொழிலாளர்கள் ஆகியோரைப் பற்றி பல அறிவார்ந்த படைப்புகளில் குறிப்புகள் காணப்படுகின்றன.)**

5. தகர தொழிற்சாலைக்கு ___________ புகழ்பெற்றது.

A) ஜெய்ப்பூர்

B) ஒடிசா

**C) வங்காளம்**

D) ஆந்திரா

**(குறிப்பு: இந்தியாவில் சில சிறப்பு வாய்ந்த பொருட்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்காக உற்பத்தி செய்யப்பட்டன. அவைகள் பருத்தித் துணிகள், மஸ்லின் துணிகள், கம்பளி, பட்டு மற்றும் உலோகப்பொருட்கள் ஆகியனவாகும்.)**

6. கூற்று 1: கி.மு 2000 ஆம் ஆண்டுகள் பழமையான எகிப்திய கல்லறைகளில் உள்ள மம்மிகள் மிகச் சிறந்த தரம் வாய்ந்த இந்திய மஸ்லின் ஆடைகள் கொண்டு சுற்றப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கூற்று 2: 50 மீட்டர் அளவு கொண்ட மெல்லிய இந்த மஸ்லின் துணியை ஒரு தீப்பெட்டிக்குள் அடக்கிவிடலாம்.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

7. _________ தொழில் இந்தியாவின் பழமையான தொழிலாகும்.

**A) நெசவு**

B) எஃகு

C) மின் சக்தி

D) உரங்கள்

**(குறிப்பு: இந்திய நெசவாளர்களின் மிகவும் சிறப்பு வாய்ந்த திறன்கள் மற்றும் குறைந்த உற்பத்தி செலவு ஆகியவை ஐரோப்பிய உற்பத்தியாளர்களுக்கு கடுமையான போட்டியை அளித்தன.)**

8. இந்திய நெசவாளர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் இடையே ஏற்பட்ட போட்டியின் காரணமாக கீழ்க்கண்ட எவை இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்டன?

1. காட்டன் ஜின் 2. பறக்கும் எறிநாடா

3. நூற்கும் ஜென்னி 4. நீராவி இயந்திரம்

**A) அனைத்தும்** B) 3, 4 C) 1, 2, 4 D) 1, 3, 4

**(குறிப்பு: ஐரோப்பியர்களை மேற்கண்ட கண்டுபிடிப்புகள் நெசவு உற்பத்தியை பெரிய அளவில் உருவாக்க உதவியது.)**

9. ஆங்கிலேயர்கள் இந்தியாவின் வளங்களை சுரண்டுவதும் இந்தியாவின் செல்வங்களை பிரிட்டனுக்கு கொண்டு செல்வதுமே இந்திய மக்களின் வறுமைக்கு காரணம் என்பதை முதலில் ஏற்றுக் கொண்டவர்

A) அம்பேத்கர்

**B) தாதாபாய் நௌரோஜி**

C) ஜவஹர்லால் நேரு

D) மகாத்மா காந்தியடிகள்

**(குறிப்பு: இக்கொள்கை தாதாபாய் நௌரோஜியின் செல்வச் சுரண்டல் கோட்பாடு என அழைக்கப்படுகிறது.)**

10. கிழக்கிந்திய கம்பெனியால் பின்பற்றப்பட்ட __________ கொள்கை, இந்திய வர்த்தகர்கள் தங்கள் பொருட்களை சந்தை விலைக்கு குறைவாக விற்க கட்டாயப்படுத்தியது.

A) வாரிசு இழப்புக் கொள்கை

B) துணைப் படைத் திட்டம்

**C) தடையில்லாக் கொள்கை**

D) தலையிடாக் கொள்கை

**(குறிப்பு: கிழக்கிந்தியக் கம்பெனியின் நோக்கமானது மலிவான விலையில் இந்திய தயாரிப்பு பொருட்களை பெருமளவிற்கு வாங்கி மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு பெரும் லாபத்திற்கு விற்க வேண்டும் என்பதாகும்.)**

11. கூற்று 1: பிரிட்டனுக்கு கொண்டு செல்லப்பட்ட இந்திய பொருட்களுக்கு கடுமையான வரிவிதிக்கப்பட்டன.

கூற்று 2: இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்ட ஆங்கிலேய பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது..

**A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்ட ஆங்கிலேய பொருட்களுக்கு பெயரளவில் மட்டுமே வரி விதிக்கப்பட்டன. இந்தியாவின் வர்த்தக நலன்களுக்கெதிரான பாதுகாப்பு கட்டணங்களின் கொள்கையை ஆங்கிலேயர்கள் பின்பற்றினர்.)**

12. ___________ நூற்றாண்டின் முதல்பாதியில் மேற்கத்திய நாடுகள் தொழில்மயமாக்கலை அனுபவித்து வந்த அதே வேளையில் இந்திய தொழில் துறையானது வீழ்ச்சியின் காலத்தை சந்தித்தது.

A) 17 B) 18 **C) 19** D) 20

**(குறிப்பு: பழமையான தொழில்நுட்பங்களுடன் தயாரிக்கப்பட்ட இந்தியப் பொருட்கள் இங்கிலாந்தில் இயந்திரங்களால் முடிக்கப்பட்ட பொருட்களுடன் போட்டியிட முடியவில்லை.)**

13. பாரம்பரிய இந்திய கைவினை தொழிலுக்கு இடையூறு ஏற்படுத்தும் செயல்பாடு மற்றும் தேசிய வருமானத்தின் வீழ்ச்சி ஆகியன _________ என குறிப்பிடப்படுகிறது.

A) தொழில்மயமாதல்

**B) தொழில்மயமழிதல்**

C) இயந்திரமயமாதல்

D) கைவினைத்தொழில் அழிதல்

**(குறிப்பு: ஒரு சக்தி வாய்ந்த தொழிற்துறை அமைப்பு, மிகப்பெரிய இயந்திரங்கள், பெரிய அளவிலான உற்பத்தி ஆகியவற்றை பின்புலமாகக் கொண்ட வெளிநாட்டு தொழிலகங்களுடன் இந்திய உள்நாட்டு தொழிலகங்கள் போட்டியிட முடியவில்லை.)**

14. ___________ கட்டுமானத்திற்கு பின்பு இந்தியத் தொழிற்துறை மேலும் சிக்கலைச் சந்தித்தது.

A) ராயல் கால்வாய்

B) பனாமா கால்வாய்

C) லேஹி கால்வாய்

**D) சூயஸ் கால்வாய்**

**(குறிப்பு: சூயஸ் கால்வாய் போக்குவரத்து செலவினை குறைத்ததுடன் இந்தியாவில் பிரிட்டிஷ் பொருட்களை மலிவானதாக மாற்றியது.)**

15. மஸ்லின் ஆடைகளுக்கு _________ புகழ்பெற்றது.

A) வங்காளம்

B) குஜராத்

**C) டாக்கா**

D) உத்ரகண்ட்

**(குறிப்பு: பருத்தி மற்றும் பட்டு ஆடைகளின் சிறந்த தரத்திற்கு இந்தியா பிரபலமானது.)**

16. __________ நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந்தியாவில் தொழில்மயமாக்களின் செயல்பாடு தொடங்கியது.

A) 17 B) 18 **C) 19** D) 20

**(குறிப்பு: நவீனத் தொழிற்துறையின் தொடக்கமானது முக்கியமாக சணல், பருத்தி மற்றும் எஃகு தொழில்களின் வளர்ச்சியுடன் தொடர்புடையது.)**

17. கூற்று 1: இரசாயனம், இரும்பு மற்றும் எஃகு, சர்க்கரை, சிமெண்ட், கண்ணாடி மற்றும் மற்ற நுகர்வோர் பொருட்கள் போன்ற தொழில்களின் வளர்ச்சிக்கு இரண்டு உலகப்போர்களும் ஒரு உத்வேகத்தை அளித்தன.

கூற்று 2: ரயில்வே மற்றும் சாலைகளின் வளர்ச்சி துரிதப்படுத்தப்பட்டவுடன் தொழில்மயமாக்கல் தொடங்கியது.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: தொழில்மயமாக்கலின் போது பெரும்பாலான ஆலைகள் பணக்கார இந்திய வணிகர்களால் அமைக்கப்பட்டன. தொடக்கத்தில் இந்த வளர்ச்சி பருத்தி மற்றும் சணல் ஆலைகள் அமைப்பதில் மட்டுமே இருந்தது.)**

18. அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் ______________ ஆண்டு நிறுவப்பட்டது.

A) 1832 B) 1835 C) 1837 **D) 1839**

**(குறிப்பு: தேயிலைத் தோட்டம் கிழக்கிந்திய பகுதிகளில் மிக முக்கியமான தொழிலாக இருந்தது போலவே காபி தோட்டமும் தென்னிந்தியாவின் நடவடிக்கைகளின் மையமாக மாறியது.)**

19. __________ ஆண்டு பம்பாயில் பருத்தி நூற்பு ஆலை நிறுவப்பட்டது.

A) 1838 B) 1847 **C) 1854** D) 1858

**(குறிப்பு: இச்சமயத்தில் ஒரு ஒருங்கமைக்கப்பட்ட வடிவிலான நவீன தொழிற்துறைப் பிரிவு தொடங்கப்பட்டது.)**

20. _________ ஆண்டு கல்கத்தாவிற்கு அருகில் ரிஷ்ரா என்ற இடத்தில் ஹுக்ளி பள்ளத்தாக்கில் சணல் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

A) 1854 **B) 1855** C) 1857 D) 1858

**(குறிப்பு: பருத்தி ஆலைகள் இந்திய நிறுவனங்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டன, மற்றும் சணல் ஆலைகள் பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு சொந்தமானவையாக இருந்தன.)**

21. __________ ஆண்டு முதல் காகித ஆலை கல்கத்தாவுக்கு அருகில் பாலிகன்ஜ் என்ற இடத்தில் துவங்கப்பட்டது.

A) 1858 B) 1865 **C) 1870** D) 1875

**(குறிப்பு: பம்பாய் மற்றும் அகமதாபாத்தில் பருத்தி ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன.)**

22. கம்பளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் ____________ ல் முக்கியத்துவம் பெற்றன?

A) அகமதாபாத்

**B) கான்பூர்**

C) பம்பாய்

D) அலகாபாத்

23. இந்தியாவில் _________ ஆண்டு முதன்முறையாக நவீன முறையில் எஃகு தயாரிக்கப்பட்டது.

A) 1855 B) 1867 **C) 1874** D) 1888

**(குறிப்பு: 1874 ஆம் ஆண்டு குல்டி என்ற இடத்தில் நவீன முறையில் எஃகு தயாரிக்கப்பட்டது.)**

24. கீழ்க்கண்டவற்றுள் கனரக தொழில்களில் அடங்கும் தொழில்கள் எவை?

1. இரும்பு தொழில் 2. சுரங்கத் தொழில்

3. எஃகு தொழில் 4. கைவினைத் தொழில்

A) அனைத்தும் B) 1, 2 **C) 1, 3** D) 2, 4

**(குறிப்பு: 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இரும்பு மற்றும் எஃகு தொழில்கள் இந்திய மண்ணில் வேரூன்ற தொடங்கின.)**

25. __________ ஆண்டு ஜாம்ஷெட்பூர் என்ற இடத்தில் டாட்டா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) அமைக்கப்பட்டது.

A) 1887 B) 1892 **C) 1907** D) 1909

**(குறிப்பு: இந்தியாவில் மிகப்பெரிய அளவிலான எஃகு உற்பத்தியை மேம்படுத்திய பெருமை ஜாம்ஷெட்ஜி டாடா என்பவரையே சாரும்.)**

26. TISCO நிறுவனம் தேனிரும்பு, உலோக வார்ப்பு கட்டிகளை முறையே _________ ஆண்டு உற்பத்தி செய்தது.

A) 1908, 1909

B) 1909, 1910

**C) 1911, 1912**

D) 1912, 1913

27. 1914 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்த இரயில்வேயின் நீளம்

A) 2,573 கி.மீ

B) 25,573 கி.மீ

C) 37,773 கி.மீ

**D) 55,773 கி.மீ**

**(குறிப்பு: 1861 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்த இரயில்வேயின் நீளம் 2,573 கிலோமீட்டர். )**

28. தொழிற்புரட்சி நடைபெற்ற இடம்__________.

A) ஜெர்மனி

**B) இங்கிலாந்து**

C) சீனா

D) ரஷ்யா

29. சூயஸ் கால்வாய் திறப்பு ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்குமான தூரத்தை ________ கிலோ மீட்டர் தூரமாக குறைத்தது.

A) 3,574 **B) 4,830** C) 5,640 D) 6,740

**(குறிப்பு: இந்த குறைக்கப்பட்ட தூரம் இந்தியாவின் தொழில்மயமாக்கலுக்கு மேலும் உதவியது.)**

30. சுதேசி இயக்கத்தின் விளைவாக பருத்தி ஆலைகள் 194 லிருந்து ___________ ஆகவும் சணல் ஆலைகள் 36 லிருந்து _______ ஆகவும் அதிகரித்தன.

A) 206, 40

B) 278, 52

**C) 273, 64**

D) 283,64

**(குறிப்பு: ஆங்கிலேயர்கள் இந்தியாவில் அதிகாரத்தை பலப்படுத்தி அதன் மூலம் ஏராளமான வெளிநாட்டு தொழில் முனைவோர்களையும் வெளிநாட்டு மூலதனத்தையும் குறிப்பாக இங்கிலாந்தில் இருந்து ஈர்த்தனர்.)**

31. கூற்று 1: இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு என்பது இந்தியாவில் உள்ள ஒரு வணிக சங்கம் ஆகும்.

கூற்று 2: இது அரசாங்கத்தின் தொழிற்துறை வழிநடத்துதல் மற்றும் தொழிற்துறையை நிர்வகிக்கும் ஒரு அமைப்பாகும்.

**A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: இந்திய தொழில்துறை கூட்டமைப்பு ஒரு அரசு சாரா, இலாப நோக்கமற்ற, தொழிற்துறை வழிநடத்துதல் மற்றும் தொழிற்துறையை நிர்வகிக்கும் ஒரு அமைப்பாகும்.)**

32. இந்திய தொழில்துறை கூட்டமைப்பு _________ ஆண்டு நிறுவப்பட்டது.

A) 1972 B) 1978 **C) 1985** D) 1989

**(குறிப்பு: தனியார் மற்றும் பொதுத்துறைகளை உள்ளடக்கிய சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் இருந்தும் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் இருந்தும் 9000 உறுப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும்.)**

33. __________ ஆண்டு தொழிற்துறை கொள்கை தீர்மானத்தினால் அரசாங்கம் தொழில் துறையில் நேரடியாக பங்களிப்பினை வெளிப்படுத்துகிறது.

A) 1947 **B) 1948** C) 1949 D) 1950

**(குறிப்பு: இந்த தீர்மானம் தொழிற்துறை வளர்ச்சியில் ஒரு தொழில் முனைவோராகவும் அதிகார, மையமாகவும் அரசின் பங்கினை வரையறுத்தது.)**

34. இந்தியாவில் தொழில்மயமழிதலுக்கு காரணம் அல்லாதது எது?

A) அரச ஆதரவின் இழப்பு

B) இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் போட்டி

**C) இந்தியாவின் தொழிற்துறை கொள்கை**

D) பிரிட்டிஷாரின் வர்த்தக கொள்கை

35. _________ ஆண்டு தொழிற்துறை கொள்கை தீர்மானத்தின்படி தொழிற்துறையானது மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

A) 1948 B) 1952 **C) 1956** D) 1958

36. சரியான கூற்றைத் தேர்ந்தெடு. (தொழிற்துறை கொள்கை-1956 ன் படி தொழிற்துறையின் மூன்று வகைகள்)

1. அட்டவணை 1: இவ்வகையான தொழிற்துறைகளை அரசாங்கம் மட்டுமே நிர்வகிக்கும். அவற்றுள் சில அணுசக்தி, மின்னணு, இரும்பு மற்றும் எஃகு ஆகியவை அடங்கும்.

2. அட்டவணை 2: இவைகள் சாலைகள் மற்றும் கடல் போக்குவரத்து, இயந்திரக் கருவிகள், அலுமினியம், நெகிழி மற்றும் உரங்கள் உள்ளிட்ட ரசாயனங்கள், இரும்பு கலவை மற்றும் குறிப்பிட்டவகையான சுரங்கங்கள் ஆகியவை அடங்கும்.

3. அட்டவணை 3: இந்த வகையின் கீழ் மீதமுள்ள தொழில்கள் மற்றும் தனியாருக்கு விடப்பட்ட துறைகள் ஆகியவை அடங்கும்.

**A) அனைத்தும் சரி**

B) 1 மட்டும் சரி

C) 2 மட்டும் சரி

D) 1, 2 சரி

37. மூலப்பொருள்களின் அடிப்படையில் தொழில்கள் எத்தனை வகைப்படும்?

**A) 2** B) 3 C) 4 D) 5

**(குறிப்பு: 1. வேளாண் அடிப்படையிலானவை, 2. கனிம அடிப்படையிலானவை)**

38. தொழிலகங்கள் அவைகளின் பங்களிப்பின்படி எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன?

1. வேளாண் அடிப்படை தொழில்கள்

2. கனிம அடிப்படை தொழில்கள்

3. அடிப்படை தொழில்கள்

4. முக்கியத் தொழில்கள்

5. கூட்டுறவுத் துறை தொழில்கள்

A) 1, 2 **B) 3, 4** C) 1, 2, 3 D) 1, 2, 5

39. தொழில் உரிமத்தின் அடிப்படையில் தொழிலகங்கள் எத்தனை வகைப்படும்?

A) 2 **B) 3** C) 4 D) 5

**(குறிப்பு: பொதுத்துறை, தனியார் துறை மற்றும் கூட்டுறவுத்துறை என தொழிலகங்கள் தொழில் உரிமத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன.)**

40. தொழில்துறை வளர்ச்சி (1950 - 1965) குறித்த கூற்றுகளில் சரியானதை தேர்ந்தெடு.

1. இக்காலகட்டத்தில் பெரும்பான்மையான நுகர்வோர் பொருட்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டன.

2. தொழில்துறை பலவீனமான உள்கட்டமைப்புடன் வளர்ச்சியடையாமல் இருந்தது.

3. தொழில்நுட்ப திறன்கள் குறைந்த அளவிலேயே கிடைத்தன.

**A) அனைத்தும் சரி**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

**(குறிப்பு: இக்காலக்கட்டத்தில் செயல்படுத்தப்பட்ட முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம் சுதந்திர இந்தியாவில் ஒரு வலுவான தொழிற்துறை தளத்தை உருவாக்குவதே ஆகும்.)**

41. ____________ துறை கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும்.

A) மூலதனப் பொருட்கள் துறை

**B) நுகர்வோர் பொருட்கள் துறை**

C) தொழில்துறை

D) போக்குவரத்து துறை

**(குறிப்பு: முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் பெரும்பாலும் மூலதனப் பொருட்கள் துறையின் வளர்ச்சியில் கவனம் செலுத்தியதால், நுகர்வோர் பொருட்களின் துறை புறக்கணிக்கப்பட்டது. இந்த காலகட்டம் பின்னடைவு காலமாக கருதப்படுகிறது.)**

42. __________ காலகட்டம் தொழிற்துறையின் மீட்பு காலமாக கருதப்படுகிறது.

A) 1940 B) 1950 C) 1960 **D) 1980**

**(குறிப்பு: இந்த காலகட்டத்தில் தொழிற்துறை மிகவும் வளமான வளர்ச்சியைக் கண்டது.)**

43. கூற்று 1: 1990ஆம் ஆண்டு பொருளாதார தாராளமயமாக்கல் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியது.

கூற்று 2: பத்தாவது மற்றும் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் தொழிற்துறை உற்பத்தியில் உயர் வளர்ச்சி விகிதத்தைக் கண்டன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

**B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி**

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: 1991ஆம் ஆண்டு பொருளாதார தாராளமயமாக்கல் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியது.)**

44. கீழ்க்கண்ட எந்த நடவடிக்கைகள் இந்தியத் தொழிற்துறை செழிக்க உதவியது?

1. தொழிற்துறை உரிமத்தை ஒழித்தல்

2. விலைக் கட்டுப்பாடுகளை நீக்குதல்

3. சிறுதொழில்களுக்கான கொள்கைகளை நீர்த்து போகச் செய்தல்

4. ஏகபோக சட்டத்தின் மாயயை ஒழித்தல்

**A) அனைத்தும்**

B) 1, 3

C) 2, 4

D) 1, 3, 4

**(குறிப்பு: 1991ஆம் ஆண்டு புதிய பொருளாதாரக் கொள்கை வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்கிறது.)**

45. மின்சார உற்பத்தியில், ஆசிய நாடுகள் அளவில் இந்தியா எத்தனையாவது பெரிய நாடாக உருவாகியுள்ளது?

A) 2 **B) 3** C) 4 D) 5

**(குறிப்பு: இந்தியாவிற்கு அதன் வளர்ச்சி இயந்திரத்தை இயக்க சக்தி தேவைப்படுவதால் ஆற்றல் கிடைப்பதற்கான குறிப்பிடத்தக்க முயற்சிகளை தூண்டிவிட்டுள்ளது.)**

46. பின்வருவனவற்றில் மக்களின் எந்த செயல்பாடுகள் கைவினைகளில் சாராதவை?

A) கல்லிலிருருந்து சிலையை உருவாக்குதல்

B) கண்ணாடி வளையல் உருவாக்குதல்

C) பட்டுசேலை நெய்தல்

**D) இரும்பை உருக்குதல்**

47. இந்தியாவில் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய நோக்கமாக இருந்தது என்ன?

A) மக்கள் தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்துதல்

B) எழுத்தறிவின்மையைக் குறைத்தல்

**C) வலுவான தொழிற்துறை தளத்தை உருவாக்குதல்**

D) பெண்களுக்கு அதிகாரமளித்தல்

48. பொருத்துக.

| | |
|---|---|
| 1. டவேர்னியர் | i) செல்வச் சுரண்டல் கோட்பாடு |
| 2. டாக்கா | ii) காகித ஆலை |
| 3. தாதாபாய் நௌரோஜி | iii) கைவினைஞர் |
| 4. பாலிகன்ஜ் | iv) மஸ்லின் துணி |
| 5. ஸ்மித் | v) பிரெஞ்சு பயணி |

A) iii iv ii i ii

**B) v iv i ii iii**

C) v iii ii i iv

D) ii iii i iv v

49. கூற்று: இந்திய கைவினைஞர்கள் பிரிட்டிஷாரின் காலனிய ஆதிக்கத்தில் நலிவுற்றனர்.

காரணம்: பிரிட்டிஷார் இந்தியாவை தனது மூலப்பொருள் தயாரிப்பாளராகவும் முடிவுற்ற பொருட்களுக்கான சந்தையாகவும் கருதினர்.

**A) கூற்று சரி, காரணம் கூற்றுக்கான விளக்கம்**

B) கூற்று சரி. ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை

C) கூற்றும் காரணமும் சரி

D) கூற்றும் காரணமும் தவறானவை

50. பின்வருவனவற்றுள் சரியாக பொருந்தாத ஒன்று எது?

A) பெர்னியர் - ஷாஜகான்

B) பருத்தி ஆலை – அகமதாபாத்

C) TISCO – ஜாம்ஷெட்பூர்

**D) பொருளாதார தாராளமயமாக்கல் – 1980**

**(குறிப்பு: பொருளாதார தாராளமயமாக்கல் - 1991)**